# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 பங்குனி 10 செவ்வாய்க்கிழமை 25.03.2025







# முன்னாள் இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் கைது!

## ஏப்ரல் முதலாம் திகதி வரை விளக்கமறியல்



கொழும்பு, மார்ச் 25

முன்னாள் இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் இலஞ்ச, ஊழல் ஆணைக்குழு அதிகாரிகளால் இன்று செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரை ஏப்ரல் முதலாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு புதுக்கடை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டபோதே, அவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

# யாழ். கச்சேரியில் அமளிதுமளி அர்ச்சுனா - இளங்குமரன் மோதல்

## கூட்டத்திலிருந்து வெளியேறிய சிறீதரன்





யாழ்ப்பாணம், மார்ச் 25

தனிப்பட்ட அரசியல் விவகாரங்கள் மற்றும் தனிநபர் அவதூறுகளைக் கட்டுப்படுத்தும் ஆற்றல் யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருக்கு இல்லாமையைச் சுட்டிக்காட்டி கூட்டத்தில் இருந்து இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் வெளியேறினார்.

7

## நால்வர் மீதான பிரிட்டனின் தடை

# நீதிக்கான தேடலின் நம்பிக்கைக் கீற்றே

## சிறீதரன் எம்.பி. தெரிவிப்பு



யாழ்ப்பாணம், மார்ச் 25

இலங்கையில் தமிழர்கள் மீதான இன அழிப்பு யுத்தத்தில் ஈடுபட்ட இலங்கை ஆயுதப்படையின் முன்னாள் தலைவர் சவேந்திர சில்வா, கடற்படை முன்னாள் தளபதி வசந்த கரன்னகொட,

7

# கிராண்ட்பாஸ் துப்பாக்கிச் சூடு: பிரதான துப்பாக்கிதாரி கைது!

கொழும்பு, மார்ச் 25

கொழும்பு - கிராண்ட்பாஸ் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட நாவலகம் வீதி பகுதியில் கடந்த 17 ஆம் திகதி இடம்பெற்ற

7



# பொலிஸ்மா அதிபர் பதவியில் இருந்து தேசபந்துவை நீக்குவதற்கான பிரேரணை

## 115 எம்.பிக்களின் கையொப்பங்களுடன் சபாநாயகரிடம் சமர்ப்பிப்பு



கொழும்பு, மார்ச் 25

தேசபந்து தென்னக்கோனைப் பொலிஸ்மா அதிபர் பதவியில் இருந்து நீக்குவதற்கான பிரேரணை சபாநாயகரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

தேசிய மக்கள் சக்தி கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரால் இந்தப் பிரேரணை கையளிக்கப்பட்டுள்ளது.

7

# இலங்கை – இந்திய மீனவர் பிரச்சினை: நாளை வவுனியாவில் பேச்சுவார்த்தை

யாழ்ப்பாணம், மார்ச் 25

இலங்கை – இந்திய மீனவர் பிரச்சினை தொடர்பில் இலங்கை மீனவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு இந்திய மீனவர் குழுவினர் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ளனர்.

இதற்கமைய வவுனியாவில் நாளை இலங்கை – இந்திய மீனவர்கள் பேச்சுவார்த்தை நடைபெறவுள்ளது

7



# தேர்தல் ஆணைக்குழு அரசிடம் கோரிக்கை!

கொழும்பு,மார்ச்25

தேர்தல் காலத்தில் அமைச்சுக்கள் மற்றும் அரச திணைக்களங்களில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பான தகவல்களை தேர்தல் ஆணைக்குழுவிற்கு தெரிவிக்க வேண்டும் என அரசிடம் அறிவுறுத்தி உள்ளது.

அரசின் இந்த அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பில் ஆணைக்குழு மறு ஆய்வு செய்து இறுதி முடிவை எடுக்கவுள்ளதாக தேர்தல் ஆணைக்குழு தெரிவித்தது.

அத்துடன் இந்த திட்டங்களில் தேர்தலுக்கு தாக்கம் செலுத்தக்கூடிய திட்டங்கள் ஏதும் இருப்பின், அவற்றை தேர்தலுக்கு பின்னர் மேற்கொள்ளுமாறு அரசாங்கத்திற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்படும் என்றும் தேர்தல் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

தேர்தல் காலப் பகுதியில் அமைச்சரவையால் எடுக்கப்படும் தீர்மானங்கள் தேர்தல் ஆணைக்குழுவிற்கு தெரிவிக்கப்பட்டு, ஆணைக்குழு அந்த தீர்மானங்களை மறு ஆய்வு செய்து அது தொடர்பாக அரசாங்கத்திற்கு அறிவிக்கும் நடைமுறை பாரம்பரியமாக இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# முன்னாள் பொலிஸ்மா அதிபர் தென்னக்கோனுக்கு 3 வேளையும் வீட்டிலிருந்து உணவு வருகின்றதாம்

கொழும்பு, மார்ச் 25

சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள முன்னாள் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனுக்கு வீட்டிலிருந்து கொண்டுவரப்படும் உணவுகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று சிறைச்சாலை ஆணையாளர் காமினி பீ. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

2023 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 13 ஆம் திகதி மாத்தறை, வெலிகம – பெலேன பகுதியில் உள்ள ஹோட்டல் ஒன்றின் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பில் முன்னாள் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனைக் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு மாத்தறை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

தேசபந்து தென்னக்கோன் நீதிமன்ற உத்திரவை அவமதித்து சுமார் 20 நாட்கள் தலைமறைவாக இருந்த நிலையில், கடந்த புதன்கிழமை காலை மாத்தறை நீதிவான் நீதிமன்றத்தில் சரணடைந்ததையடுத்து ஏப்ரல் மாதம் 3 ஆம் திகதி வரை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

தேசபந்து தென்னக்கோனின் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு அவரைப் பல்லேகெலே, தும்பர சிறைச்சாலையில் உள்ள சிறைக்கூண்டில் விசேட பாதுகாப்புடன் தடுத்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட நிலையில் தற்போது அவருக்கு வீட்டிலிருந்து கொண்டுவரப்படும் உணவுகளை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# சிறுமியை மின்கம்பத்தில் கட்டி வைத்து தாக்குதல்

## குடத்தனையில் கொடூரம்



யாழ்ப்பாணம், மார்ச் 25

யாழ். வடமராட்சி கிழக்கில் மின் கம்பத்தில் சிறுமியைக் கட்டி வைத்து தாக்கி, சித்திரவதை புரிந்த குற்றச்சாட்டில் பெண் ஒருவரைக் கைது செய்வதற்கு மருதங்கேணி பொலிஸார் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

குடத்தனை பகுதியைச் சேர்ந்த 14 வயது சிறுமி ஒருவர், தனது வீட்டுக்கு அருகில் உள்ள கடையில் பொருட்களை வாங்கச் சென்ற சமயம், கடையில் இனிப்புப் பொருட்களைத் திருடினார் என கடை உரிமையாளரான பெண், சிறுமியை மின் கம்பத்தில் கட்டி வைத்து, தாக்கி சித்திரவதை செய்துள்ளார்.

பின்னர், சிறுமி காயங்களுடன் வீட்டுக்குச் சென்ற நிலையில், வீட்டார் சிறுமியை பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதித்தனர்.

சிகிச்சையைத் தொடர்ந்து, சட்ட வைத்திய அதிகாரி சிறுமியை சோதனை செய்த போது, சிறுமியின் உடலில் அடிகாயங்கள் இருந்ததுடன், சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டமைக்கான காயங்களும் காணப்பட்டுள்ளன.

அது தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸாருக்கு சட்ட வைத்திய அதிகாரி அறிவுறுத்தியதை அடுத்து, தாக்குதலாளியான கடை உரிமையாளரான பெண்ணைக் கைது செய்வதற்குப் பொலிஸார் அவரது வீட்டுக்கு சென்ற சமயம், அவர் தலைமறைவாகியுள்ளார்.

அவரைக் கைது செய்வதற்கு பொலிஸார் நடவடிக்கையை எடுத்துள்ளனர்



# யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்















யாழ்ப்பாணம், மார்ச் 25

யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இன்று நடைபெற்றது. யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர் கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தலைமையில் இந்தக் கூட்டம் இடம்பெற்றது.

இதன்போது யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளப்படும் மற்றும் மேற்கொள்ள வேண்டிய அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் பொதுமக்களின் பிரச்சினைகள், தேவைகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் ஆராயப்பட

இந்தக் கூட்டத்தில் வடக்கு மாகாண ஆளுநர், யாழ். மாவட்ட அரச அதிபர், பிரதேச செயலர்கள், அரச திணைக்களங்களின் தலைவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.





## பெண் மேலாளர் மரண வழக்கு: ஆதித்யா தாக்கரே மீது புதிய புகார்

திஷா சாலியன் மரண வழக்கில், சிவசேனா உத்தவ் அணியின் எம்.எல்.ஏ.,வும் மஹாராஷ்டிரா முன்னாள் முதல்வர் உத்தவ் தாக்கரே மகனுமான ஆதித்யா தாக்கரே உள்ளிட்டோர் மீது புதிய புகார் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

திஷா சாலியன் மரணத்திற்கு சில நாட்களுக்குப் பிறகே சுஷாந்த் சிங் ராஜ்புத்தின் தற்கொலை நடந்தது. இது பரவலான கற்பனைக் கதைகள் மற்றும் சதிக் கோட்பாடுகளுக்கு வழிவகுத்தது. காவல் துறை ஆரம்பத்தில் இதை தற்கொலை என்று அறிவித்தாலும், சில குழுக்கள் சி.பி.ஐ., விசாரணை கோரி, உண்மை மறைக்கப்பட்டதாகக் குற்றம் சாட்டின.

இந்த புகாரில், விசாரணையில் தவறுகள் இருப்பதாகக் குற்றம் சாட்டப்பட்டு, அவரது மரணம் தற்செயலானதா அல்லது சதித்திட்டம் இருந்ததா என மீண்டும் விசாரணை நடத்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு அரசியல் ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. இதற்கு முன்பு பா.ஜ., தலைவர்கள் ஆதித்யா தாக்கரேவுக்கு தொடர்பு இருப்பதாகக் குற்றம் சாட்டியிருந்தனர். இதை அவரும் அவரது கட்சியும் கடுமையாக மறுத்துள்ளனர்.

திஷா சாலியனின் தந்தையின் வழக்கறிஞர், மும்பை காவல்துறையில் வழக்கு தொடர்ந்துள்ளார். புகாரில், ஆதித்யா தாக்கரே, நடிகர்கள் டினோ மோரியா மற்றும் சூரஜ் பஞ்சோலி மற்றும் அவரது மெய்க்காப்பாளரான முன்னாள் உயர் போலீஸ் அதிகாரி பரம்பீர் சிங், மும்பை காவல்துறை அதிகாரி சச்சின் வாசே மற்றும் ரியா சக்ரவர்த்தி ஆகியோரின் பெயர்களை அவர் குறிப்பிட்டுள்ளதாக வழக்கறிஞர் தெரிவித்துள்ளார்.

இந்த புதிய புகார் மும்பை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு, புதிய விசாரணை கோரப்பட்டுள்ளது.

ஆரம்ப விசாரணையில் ஈடுபட்ட காவல் துறை அதிகாரிகள் பெயர்களும் சேர்க்கப்பட்டுள்ளன, இதில் விசாரணை குறைகள் இருந்தன என சந்தேகங்கள் எழுப்பப்பட்டுள்ளன. இந்த வழக்கை மையமாக வைத்து பா.ஜ., மற்றும் சிவசேனா உத்தவர் அணி இடையே அரசியல் வாதங்கள் நடந்து வருகின்றன.

இந்த புதிய புகார், மகாராஷ்டிர அரசியலில் புதிய பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.







# காங்., திரிணமுல் காங். கட்சியினர் போராட்டம்

## பரபரப்பானது பார்லி., வளாகம்

மத்திய அரசுக்கு எதிராக பார்லிமென்ட் வளாகத்தில், காங்கிரஸ், திரிணமுல் காங்கிரஸ் கட்சியினர் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் பார்லிமென்ட் வளாகம் பரபரப்பாக காணப்பட்டது.

பட்ஜெட் கூட்டத்தொடரின் இரண்டாவது அமர்வு கடந்த மார்ச் 10ம் தேதி துவங்கியது. ஏப்., 4 வரை நடக்க உள்ளது. கூட்டத்தொடர் துவங்கி முதல் நாளில் இருந்து எதிர்க்கட்சிகள் அமளியில் ஈடுபட்டு வருகின்றனர். இதற்கிடையே இன்று மத்திய அரசு மேற்கு வங்க மாநிலத்திற்கு நிதி தர மறுக்கிறது எனக் கூறி திரிணமுல் காங்கிரஸ் எம்.பி.,க்கள் பார்லிமென்ட் வளாகத்தில் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நீதிபதி வீட்டில் பணம் விவகாரம் எதிரொலி அமளியால் பார்லிமென்ட் ஒத்திவைப்பு

காங்கிரஸ் எம்.பி.,யும், லோக்சபா எதிர்க்கட்சி தலைவருமான ராகுல் உள்ளிட்ட காங்கிரஸ் கட்சியினர் சிறிது நேரம் போராட்டத்தில் கலந்து கொண்டார். போராட்டத்தில் கலந்து கொண்ட திரிணமுல் காங்கிரஸ் எம்.பி., கல்யாண் பானர்ஜி கூறியதாவது:

மேற்கு வங்கத்திற்கு வழங்க வேண்டிய நிதியை மத்திய அரசு வழங்க வேண்டும் என்று நாங்கள் கூறி வருகிறோம். மேற்கு வங்க மக்களுக்கு எதிரானவர் சிவராஜ் சவுகான். மேற்கு வங்கத்தில் ஆட்சி அமைக்க முயற்சித்து வருகின்றனர்.

காங்கிரஸ் எம்.பி. ரன்தீப் சுர்ஜேவாலா கூறியதாவது: வேலையின்மை நாட்டின் மிகப்பெரிய பிரச்னையாக இருக்கிறது. பிரதமர் மோடி ஒரு வார்த்தை கூட பேசுவதில்லை, 30 லட்சத்திற்கும் அதிகமான அரசு வேலைகள் காலியாக உள்ளன. வினாத்தாள் கசிவு நடந்து கொண்டிருக்கிறது. இந்த அரசு இளைஞர்களின் எதிர்காலத்தை இருளில் தள்ளியுள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

## 12ம் வகுப்பு மாணவர்களுக்கு தேர்வில் கால்குலேட்டர் அனுமதி புதிய திட்டம்

புதுடில்லி கணக்கு பதிவியல் தேர்வில் 12ம் வகுப்பு மாணவர்கள், கால்குலேட்டர் பயன்படுத்திக் கொள்ள சி.பி.எஸ்.இ., அனுமதி அளிக்க திட்டமிட்டுள்ளது.

2025-26ம் கல்வியாண்டில் பல்வேறு சீர்திருத்தங்களை மேற்கொள்ள சி.பி.எஸ்.இ., முடிவு செய்துள்ளது. அதற்கான ஆலோசனைகளிலும் ஈடுபட்டுள்ளது. 140வது ஆட்சிமன்ற குழுவின் கூட்டத்தில் சீர்திருத்தங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு உள்ளது.


இதுகுறித்து சி.பி.எஸ்.இ., அதிகாரிகள் கூறியதாவது

விரைவில் அதற்கான வழிகாட்டு நெறிமுறைகள் விரைவில் வெளியிடப்படும். புதிய கல்விக் கொள்கை மற்றும் சர்வதேச மதிப்பீட்டு நடைமுறைகளுக்கு ஏற்ப இந்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது.



மேலும், விடைத்தாள்களை டிஜிட்டல் முறையில் மதிப்பீடு செய்ய ஆன் ஸ்கீரின் மார்க்கிங் (ழுளுஆ - ழுெ ளஉசநநெ அயசமைபெ) என்ற முறை அறிமுகப்படுத்தப்படும். மதிப்பெண்களில் திருப்தி இல்லாத மாணவர்கள், இந்த புதிய மறுமதிப்பீடு முறையால் வெளிப்படைத்தன்மையை உணர்வர்.

இவ்வாறு அதிகாரிகள் கூறி உள்ளனர்.



## வேல் யாத்திரைக்கு உச்ச நீதிமன்றம் அனுமதி மறுப்பு

பாரத் ஹிந்து முன்னணி என்ற அமைப்பு சார்பில், சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுவில் கூறப்பட்டுள்ளதாவது: மதுரை திருப்பரங்குன்றம் மலையில், ஹிந்து கடவுளான முருகனின் கோவில் அமைந்துள்ளது. ஆனால், இந்த மலையை இஸ்லாமியர்கள் உரிமை கொண்டாடுகின்றனர். எனவே, திருப்பரங்குன்றம் மலையை பாதுகாக்க, சென்னையில் வேல் யாத்திரை நடத்த அனுமதிக்க வேண்டும். இவ்வாறு அந்த மனுவில் கூறப்பட்டிருந்தது.

இதை, சென்னை உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்தது. இதற்கு எதிராக மனுதாரர் தரப்பில் உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டது. அந்த மனு உச்ச நீதிமன்றத்தில் நேற்று தள்ளுபடி செய்யப்பட்டது.




# வாகனம் பழகு பெண்ணே!

"அப்பா, ஸ்கூலுக்கு லேட் ஆகிட்டு, என்னைக் கொண்டு போய்விடுறீங்களா?

" நேரமா ஒபிஸ் போகோணும், நீ போகும் போது என்னையும் இறக்கி விட்டு போறியாடா தம்பி?"

பள்ளி மாணவி தொடங்கி நடுத்தர வயதைக் கடந்த பெண் வரையில் பெரும்பாலான பெண்கள் இது போன்ற வேண்டுகோள்களை விடுப்பதைக் கேட்டிருப்போம். இயல்பாகக் கடந்திருப்போம். எல்லா வயதிலும், அதிக அளவிலான பெண்கள் தனது இயக்கத்திற்காக (அழுடைவைல), வீட்டிலுள்ள ஆண்களின் வாகனங்களையோ, பொது போக்குவரத்தையோதான் சார்ந்திருக்கிறார்கள். தனக்கென்று வாகனம் வைத்துக்கொள்வதில் பெண்ணுக்கு என்ன தயக்கம்? ஒருவேளை வீட்டில் இருந்தாலும், ஓட்டுவதில் என்ன பிரச்சினை?

சிறு வயதில் சைக்கிள் ஓட்டுவதிலிருந்து ஆரம்பிப்போம். ஏழெட்டு வயதில் சிறுவர், சிறுமியருக்கு சைக்கிள் ஓட்டக் கற்றுக் கொள்வது பெரிய சாகசம். வசதி இருக்கும் பெற்றோர் சொந்தமாக வாங்கிக் கொடுப்பார்கள். வசதி இல்லாத வீட்டுக் குழந்தைகள் வாடகை சைக்கிள் எடுத்து ஓட்டப் பழகுவார்கள். ஆண் குழந்தைக்கு இணையாகப் பெண் குழந்தையும் ஓட்டிப் பழகும், நன்றாகவே சைக்கிள் ஓட்டும். ஆனாலும், "பாத்து ஓட்டு, பொம்புளப் புள்ள கீழ விழுந்து கையைக் காலை உடைசிட்டா நாளைக்கு எவன் கல்யாணம் கட்டுவான்?" என்ற ஏச்சுகளோடு, வீட்டில் அடக்கியே வைப்பார்கள். சைக்கிள் ஓட்டுவதில் இருக்கும் கொஞ்ச சுதந்திரமும் வயதுக்கு வந்தவுடன், முற்றிலும் இல்லாமல் போகும். அதுவரை சைக்கிளில் பள்ளிக்கூடத்திற்குப் போய்வந்து கொண்டிருக்கும் சிறுமிக்கு, அதற்குப் பிறகு தடைவிதிக்கப்படும். வீட்டு ஆண்கள் கொண்டு போய்விடுவார்கள். இல்லாவிட்டால், நடந்தோ பஸ்ஸிலோ போக வேண்டும்.

சைக்கிள் என்பது பெண்ணின் இயக்கத்திற்குப் பேருதவியாக இருக்கும் எளிய வாகனம். வயதுக்கு வந்த பெண்ணிடம் சைக்கிளைத் தந்தால் அவள் பள்ளிக்கு மட்டுமல்ல, விருப்பம் போல எங்கே வேண்டுமானாலும் சுற்றுவாள், அவளைக் கண்காணித்துக் கொண்டே இருக்க முடியாது என்று இந்த ஆணாதிக்கப் பொதுபுத்தி, அவள் 'பாதுகாப்பை'க் காரணம் காட்டித் தடை போடும்.

'பெண்ணின் பாதுகாப்பு' என்ற சப்பைக்கட்டு கட்டித்தான் பெரும்பாலான வீடுகளில் பைக் ஓட்டுவதற்கும் தடைபோடுகிறார்கள். இளைஞர்கள் கல்லூரியில் படிக்கும் போதே பைக் ஓட்ட ஆரம்பித்துவிடுகிறார்கள். ஆனால், வசதியான வீட்டுப் பெண்களுக்குக்கூட பைக் வாங்கிக் கொடுப்பதில்லை. இன்னும் சொல்லப் போனால், வேலைக்குப் போகும் பெண் தனது சம்பாத்தியத்தில் பைக் வாங்க நிறைய வீட்டில் அனுமதி இல்லை. லோன் போட்டு கணவனுக்கு வாங்கிக் கொடுக்கும் பெண்ணுக்கு பைக் இருக்காது. "பெண்ணுக்குச் சரியாக பைக் ஓட்டத் தெரியாது", "எங்கேயாவது கொண்டு போய் மோதிவிடுவார்கள்", "அவர்களுக்குத் தொழில்நுட்ப அறிவு குறைவு, எதாவது பிரச்சினை வந்து பைக் நின்றுவிட்டால் சமாளிக்கத் தெரியாது" போன்ற பல காரணங்களைச் சொல்கிறது ஆணாதிக்கச் சமூகம். ஆனால், இவை அனைத்தும் கற்பிதங்களே.

இன்னும் சொல்லப்போனால், இது தான் உருவாக்கிய கற்பிதங்கள் என்று ஆணாதிக்கச் சமூகத்துக்கு நன்றாகத் தெரியும். இருந்தாலும், இவை திரும்பத்திரும்ப சொல்லப்பட்டு வருவதற்கான உண்மையான காரணம், பெண்ணின் இயக்கத்தைக் கட்டுப்படுத்துவதுதான். அவளைக் கூடுமானவரை வீடு என்ற தளத்திற்குள் அடைப்பதுதான் நோக்கம். தன் கட்டுப்பாட்டை மீறி அவள் சுதந்திரமாக இயங்கத் தொடங்கிவிட்டால் அவளது எழ உயடட்நன 'கற்பை' எப்படிக் கண்காணிப்பது, பெண்ணை அடக்கி வைக்க முடியாவிட்டால், அவள் தன் துணையைத் தானே தேர்ந்தெடுத்து, தன்வாழ்க்கையை வாழ ஆரம்பித்துவிட்டால் சாதியக் கட்டமைப்பைக் காப்பாற்ற முடியாதே, மதங்களைக் கட்டிக் காக்க இயலாதே என்று அஞ்சுகிறது. அதற்காக, "நீ மென்மையானவள், வாகனங்களும் சாலைகளும் கடினமானவை, உன்னால் முடியாது" என்றெல்லாம் சொல்லி, பெண்ணை மூளைச்சலவை செய்கிறது.

பல பெண்கள் இதை நம்புவதுதான் சோகம். பெண்கள், லொறி, பேருந்து, ட்ராக்டர் ஓட்டுகிறார்கள், ரயிலை இயக்குகிறார்கள், போர்விமானத்தில் பறக்கிறார்கள், கப்பல் ஓட்டுகிறார்கள், விண்வெளிக்கு பயணிக்கிறார்கள். இன்னும் என்ன தயக்கம் தோழிகளே? முறையாகப் பயிற்சி பெற்றால் சைக்கிளோ, பைக்கோ, காரோ உங்களுக்கு எதை ஓட்ட வாய்ப்பிருக்கிறதோ அதைத் தாராளமாக ஓட்டலாம். அதற்கேற்றவாறு உடை உடுத்திக் கொண்டால் இன்னும் வசதியாக இருக்கும். ஒரு வாகனத்தை ஓட்டுவதற்கு முன்பு, அதைப் பற்றி முழுமையாக அறிந்துகொள்வது அவசியம். வழியில் நின்றுவிட்டால், என்ன செய்வது, உதவிக்கு எந்த எண்ணை அழைக்க வேண்டும் போன்ற விவரங்களைக் கைவசம் வைத்திருங்கள். தொடர்ச்சியாக ஓட்ட, ஓட்ட சாலை பயம் போய்விடும். இன்னோர் உண்மை என்ன தெரியுமா, ஆண்களுடன் ஒப்பிடும் போது, பெண்கள் வாகனம் ஓட்டும் போது ஏற்படும் விபத்துகளின் எண்ணிக்கை மிகக் குறைவு என்று ஒரு புள்ளிவிவரம் கூறுகிறது. பெண்களிடம் இயல்பாகவே உள்ள ஜாக்கிரதை உணர்வும் இதற்கு ஒரு காரணம்.

பைக் ஓட்டும் பெண்களுக்குச் சாலையில் சவாலாக இருப்பவர்கள், ஆதிக்க மனநிலை கொண்ட சக ஆண் ஓட்டுனர்கள்தாம். பெண் என்ற இளக்காரப் பார்வையும், திடீரென அருகில் வந்து ஹாரன் அடிப்பதும், ஓவர்டேக் செய்வதுமாகத் தொந்தரவு செய்வார்கள். எந்த நிலையிலும் நிதானம் இழக்காமல் இருப்பது என்ற உறுதியுடன் வண்டி ஓட்டுவதில் மட்டும் முழுக் கவனத்தையும் செலுத்தினால், இவர்களைச் சமாளித்துவிடலாம்.

**'Pedaling to Freedom'** என்ற ஆவணப்படத்தில் 90களின் தொடக்கத்தில், புதுக்கோட்டை மாவட்டத்தில் அறிவொளி இயக்கத்தின் ஒரு பகுதியாக, பெண்களுக்கு சைக்கிள் ஓட்டக் கற்றுத்தருவதற்கு ஏற்பாடு செய்தார், அந்த மாவட்ட ஆட்சியராக இருந்த ஷீலா ராணி சுங்கத். இதனால் சுமார் ஒரு லட்சம் பெண்கள் சைக்கிள் ஓட்டக் கற்றுக்கொண்டார்கள். பெண்களின் சைக்கிள் ஓட்டும் அனுபவத்தையும், அவர்கள் வாழ்வில் அது ஏற்படுத்திய தாக்கத்தையும் படம் பேசுகிறது. படத்தில், கிராமத்துப் பெண்கள் தாம் சைக்கிள் கற்றுக்கொண்டதையும், ஓட்டுவதையும், பல இடங்களுக்குச் செல்வதையும் மகிழ்ச்சியுடன் பகிர்ந்து கொண்டது நெகிழ வைத்தது.

அன்புத் தோழிகளே, வாகனம் ஓட்டும்போது கிடைக்கும் தன்னம்பிக்கையும் சுதந்திர உணர்வும் அற்புதமானது. சுயமரியாதையும் சுயசார்பும் சேர்ந்த கலவை அது. விரும்பும் இடத்திற்குச் செல்லலாம். விரும்பியதைச் செய்யலாம். வாழ்வில் புதிய சாளரங்களைத் திறந்துவிடும். உலகையே வலம் வரும் ஆசையைத் தூண்டிவிடும். உங்கள் வாய்ப்பு வசதிக்கேற்ப ஏதாவது ஒரு வாகனம் ஓட்டக் கற்றுக்கொள்ளுங்கள், தொடர்ந்து ஓட்டுங்கள். அன்புத் தோழர்களே, உங்களைச் சுற்றியிருக்கும் பெண்களை வாகனம் ஓட்டுமாறு ஊக்கப்படுத்துங்கள். அவர்களுக்குக் கற்றுக் கொடுங்கள். சமத்துவத்திற்கான பாதை அது.






# 9 ஆயிரம் பேரை பணி நீக்கம் செய்தது ஐ.பி.எம்


அமெரிக்காவில் 9 ஆயிரம் பேரை பணியில் இருந்து ஐ.பி.எம்., நிறுவனம் நீக்கி உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

அமெரிக்காவின் நியூயார்க் நகரின் அர்மாங்க் நகரை தலைமையிடமாகக் கொண்டு ஐ.பி.எம்., நிறுவனம் செயல்பட்டு வருகிறது. உலகின் முன்னணி நிறுவனமான இங்கு, பல்வேறு நாடுகளை சேர்ந்த பல்லாயிரக்கணக்கானோர் வேலை பார்த்து வருகின்றனர்.

பல்வேறு மென்பொருள் மற்றும் கணினி சார்ந்த நிறுவனங்கள் ஆட் குறைப்பு நடவடிக்கையில் ஈடுபட்ட நிலையில், ஐ.பி.எம்., நிறுவனமும் அமெரிக்காவில் 9 ஆயிரம் பேரை பணியில் இருந்து விடுவித்து உள்ளது. கலிபோர்னியா, டெக்சாஸ், டல்லாஸ், நியூயார்க் நகரங்களில் உள்ள அலுவலகங்களில் பணியாற்றியோர் நீக்கம் செய்யப்பட்டு உள்ளனர்.

'கன்சல்டிங், கார்பரேட் சோஷியல் ரெஸ்பான்சிபிலிட்டி, கிளவுட் உள்கட்டமைப்பு, விற்பனை மற்றும் ஐடி அமைப்பு உள்ளிட்ட துறைகளில் பணியாற்றியவர்கள் தான், இந்த பணி நீக்க நடவடிக்கைக்கு உள்ளாகி உள்ளனர்.

# என்னிடம் ஏதும் கேட்டதில்லை எலான் மஸ்கிற்கு டிரம்ப் பாராட்டு



'எலான் மஸ்க் ஒரு தேச பக்தர். அவர் என்னிடம் ஏதும் கேட்டதில்லை' என அமெரிக்கா அதிபர் டொனால்டு டிரம்ப் தெரிவித்துள்ளார்.

வாஷிங்டனில் டெஸ்லா சி.இ.ஓ., எலான் மஸ்க் கலந்து கொண்ட அமைச்சரவை கூட்டத்தில், டிரம்ப் பேசியதாவது: எலான் மஸ்க் உங்களுக்கு நன்றி சொல்ல விரும்புகிறேன். அவர் ஒரு தேச பக்தர். அவர் என்னுடைய நண்பர் ஆகிவிட்டார். அவர் ஒரு போதும் என்னிடம் எதுவும் கேட்டதில்லை. அவர் கேட்டிருக்கலாம்.

அவர் எப்போதாவது என்னிடம் ஏதாவது கேட்பாரா என்று நான் எப்போதும் யோசிக்கிறேன். ஆனால் அவர் ஒருபோதும் என்னிடம் எதுவும் கேட்டதில்லை. எலான் மஸ்க் என்னிடம் ஏதாவது கேட்டால் மக்களுக்கு தெரியப்படுத்துவேன். நான் மின்சார கார் ஆணையை நீக்கிவிட்டேன்.

அது அவரை எவ்வாறு பாதிக்கிறது என்பது எனக்கு தெரியாது. அவர் இதுவரை என்னிடம் எதுவும் கேட்கவில்லை. அது ஒரு அற்புதமான பண்பு என்று நான் நினைக்கிறேன். டெஸ்லா வாகனங்களுக்கு தீ வைப்பவர்கள் மற்றும் டெஸ்லா சொத்துக்களை சேதப்படுத்துபவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்ததற்காக அட்டர்னி ஜெனரல் நன்றி.

குற்றவாளிகளை கண்டுபிடிக்கும்போது அவர்கள் பயங்கரவாதிகள் என்பதால் அவர்கள் கடுமையான விளைவுகளை சந்திக்க நேரிடும்.

அவர்களுக்கு நிதியுதவி செய்பவர்கள் மீதும் கடும் நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு அவர் கூறினார்.

# ஆப்ரிக்காவில் 2 தமிழக என்ஜினியர்கள் உள்பட 7 பேர் கடத்தல்: கடற்கொள்ளையர்கள் அட்டகாசம்




ஆப்ரிக்காவில் தமிழகத்தைச் சேர்ந்த 2 என்ஜினியர்கள் உள்பட 7 பேர் கடற்கொள்ளையர்களால் கடத்தப்பட்டுள்ள சம்பவம், அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

இது பற்றிய விவரம் வருமாறு: தேனி மாவட்டத்தைச் சேர்ந்தவர் லட்சுமண பிரதீப்முருகன். தனியார் கப்பல் நிறுவனம் ஒன்றில் 3 ஆண்டுகளாக அதிகாரியாக பணியாற்றி வருகிறார். அவர், கப்பல் ஒன்றில் லோம் பகுதியில் கேமரூனுக்குச் சென்று கொண்டிருந்தார். லட்சுமண பிரதீப் முருகனுடன், கரூரைச் சேர்ந்த சதிஷ்குமார் செல்வராஜ், பீகாரைச் சேர்ந்த சந்தீப்குமார் சிங், கேரளாவில் இருந்து ராஜீந்திரன், ருமேனியாவைச் சேர்ந்த 3 பேர் உள்ளிட்ட பலர் இருந்தனர்.

மார்ச் 17ம் திகதி மத்திய ஆப்பிரிக்காவில் வடகிழக்கு சான்டோ அன்டோனியா பிரின்ஸ் என்ற பகுதியில் 40 கடல்மைல் தொலைவில் சென்று கொண்டிருந்தது. அப்போது, பயங்கர ஆயுதங்களுடன் வந்த கடற்கொள்ளையர்கள் கப்பலை முற்றுகையிட்டனர்.


ஆப்ரிக்க கடல் கொள்ளையர்கள் கடத்திய தேனி வாலிபரை மீட்க பா.ஜ.,வினர் ஏற்பாடு

இதையறிந்த லட்சுமண பிரதீப் முருகன் உள்ளிட்டோர் கப்பலில் இருந்த எச்சரிக்கை மணியை ஒலிக்க வைத்தனர். அதற்குள் கப்பலுக்குள் நுழைந்த கொள்ளையர்கள், அனைவரையும் பிணை கைதிகளாக பிடித்து வைத்தனர்.

கடற்கொள்ளையர்களால் லட்சுமண பிரதீப் முருகன் உள்ளிட்டோர் சிறைபிடிக்கப்பட்டுள்ள விவரம், அவரின் சகோதரர் ராம் பிரவீனுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து அவர் கூறுகையில், கடத்தப்பட்ட விவரத்தை மறுநாள் (மார்ச் 18) எங்களுக்கு சம்பந்தப்பட்ட கப்பல் நிறுவனம் தெரிவித்தது.

அதன் பின்னர் கடத்தப்பட்டவர்களின் நிலவரம் பற்றி எந்த தகவலும் கூறவில்லை. மீட்பு நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக அதிகாரிகளுடன் தொடர்பில் இருப்பதாக கூறினாலும், அதுபற்றி எந்த உத்தரவாதமும், எங்களுக்கு அளிக்கப்படவில்லை. உரிய நடவடிக்கைகளை மத்திய அரசு எடுத்து, அனைவரையும் மீட்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

# தேர்தலில் வெளிநாட்டு தலையீடு இந்தியா, சீனா மீது பழி சுமத்தும் கனடா



சீனாவும், இந்தியாவும் தேர்தலில் தலையிட முயற்சிக்கக்கூடும் என கனடா உளவுத்துறை குற்றம் சாட்டி உள்ளது.

அமெரிக்காவின் மற்றொரு மாகாணமாக கனடாவை சேர்க்கப் போவதாக அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் மிரட்டல் விடுத்து வரும் நிலையில், பார்லிமென்டை கலைத்து, ஏப்., 28ல் தேர்தலை நடத்துவதாக கனடாவின் புதிய பிரதமர் மார்க் கார்னி அறிவித்துள்ளார்.

இது குறித்து கனடா உளவுத்துறை வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: கனடா பொதுத்தேர்தலில் சீனாவும், இந்தியாவும் தலையிட முயற்சிக்க வாய்ப்பு உள்ளது. அதேநேரத்தில் ரஷ்யாவும், பாகிஸ்தானும் அவ்வாறு செய்ய வாய்ப்பு உள்ளது. கடந்த தேர்தல்களில் சீனாவும், இந்தியாவும் தலையிட முயற்சி செய்தது. ஆனால் அவர்களின் தலையீட்டால் எந்த பாதிப்பும் இல்லை.

தற்போதைய தேர்தலில் கனடாவின் ஜனநாயக செயல்பாட்டில் தலையிட முயற்சிக்க, செயற்கை நுண்ணறிவை பயன்படுத்த வாய்ப்புள்ளது. கனடாவின் ஜனநாயக செயல்முறைகளில் தலையிடும் நோக்கத்தையும், திறனையும் இந்திய அரசாங்கம் கொண்டுள்ளது என்பதையும் நாங்கள் கண்டிருக்கிறோம்.

வெளிநாட்டு தலையீட்டு நடவடிக்கையால் தேர்தல் முடிவுகளில் பாதிப்பை ஏற்படுத்துவது கடினம். அச்சுறுத்தல் நடவடிக்கைகள் கனடாவின் ஜனநாயக செயல்முறைகள் மற்றும் நிறுவனங்களின் நேர்மையின் மீதான மக்களின் நம்பிக்கையை சிதைத்துவிடும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

## யாழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இன்று நடைபெற்ற யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தனிப்பட்ட விடயங்களை முன்னிறுத்தி இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கிடையே கடும் வாய்த்தர்க்கம் ஏற்பட்டதால் சில நிமிடங்கள் அமளிதுமளி ஏற்பட்டது.

வலிகாமம் வடக்கில் முன்னெடுக்கப்படும் மின் இணைப்பு விடயம் தொடர்பில் விவாதம் முன்வைக்கப்பட்டபோது ஆளும் தரப்பு நாடளுமன்ற உறுப்பினரான க.இளங்குமரன் மற்றும் சுயேச்சைக் குழுவின் நாடாளுமன்ற உறுப்பினர் இ.அர்ச்சுனா இடையே ஏற்பட்ட வாக்குவாதம் அவர்களது தனிப்பட விடயங்களை முன்னிறுத்தியதாக மாறியது.

குறிப்பாக இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களும் காதல் விடயங்கள், பெண்களை ஏமாற்றிய செய்திகள், நிதி மோசடிகள் உள்ளிட்ட தனிப்பட்ட விடயங்களை முன்னிறுத்தி நூற்றுக்கணக்கான அதிகாரிகள் முன்னிலையில் குடும்பச் சண்டையிட்டனர்.

இந்நிலையில், குறித்த விவாதத்தை இடைநிறுத்துமாறு நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் அமைச்சர் இ.சந்திரசேகரிடம் வலியுறுத்தினார்.

ஆனால், ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் மேற்படி இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களையும் கட்டுப்படுத்த முடியாது ஆளுமையற்றவராகக் காணப்பட்டார்.

ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரின் ஆளுமையற்ற நிலையை அவதானித்த சிறீதரன் எம்.பி. கூட்டத்தை விட்டு வெளியேறிச் சென்றார்.

அரச அதிகாரிகளை அவமானப்படுத்தும் வகையில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் செயற்படுகின்றமையாலும், இவர்கள் சபை நாகரிமற்ற வகையில் தொடர்ந்தும் தர்க்கம் புரிகின்றமையாலும் தான் கூட்டத்தை விட்டு வெளியேறிச் செல்வதாக இதன்போது சிறீதரன் எம். பி. தெரிவித்தார்.

இதன்பின்னர் நாடாளுமன்ற உறுப்பினர்களான அர்ச்சுனா மற்றும் இளங்குமரன் ஆகியோருக்கிடையிலான வாய்த்தர்க்கம் முற்றி, கடும் குழப்ப நிலை ஏற்பட்டதையடுத்து, கூட்டத்தின் தலைவர் அமைச்சர் சந்திரசேகரரால் நிலைமையைக் கட்டுப்படுத்த முடியாமல் போனமையால் கூட்டம் இடைநிறுத்தப்பட்டது.

## பொலிஸ்மா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அந்தப் பிரேரணையில் தேசிய மக்கள் சக்தியை அங்கத்துவப்படுத்தும் 115 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கையொப்பமிட்டுள்ளனர் என்று பிரதி அமைச்சர் எரங்க குணசேகர தெரிவித்துள்ளார்.

## இலங்கை..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில் இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த ஜேசுராஜா, ஆல்வின், சகாயம், ஜஸ்டின், ஜெர்மனியஸ் ஆகியோர் கொண்ட 5 பேர் கொண்ட குழு இன்று செவ்வாய்க்கிழமை விமான மூலமாக யாழ்ப்பாணம் பலாலி விமான நிலையத்தை வந்தடைந்தது.

இதில் ஏற்கனவே நாகபட்டினத்தைச் சேர்ந்த சுரேஷ் என்பவர் இங்கு இருப்பதால் அவருடன் சேர்ந்து 6 பேர் கொண்ட குழு நாளை புதன்கிழமை வவுனியாவில் உள்ள தனியார் விடுதியில் இரு நாட்டு மீனவர்கள் சந்திப்பில் பங்கேற்கவுள்ளனர்.

இந்தப் பேச்சுவார்த்தை நாளை காலை 10 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது

இலங்கை மீனவர்கள் சார்பில் சுப்பிரமணியம் (யாழ்ப்பாணம்), மரியராசா (முல்லைத்தீவு), ஆலம் (மன்னார்), பிரான்சிஸ் (கிளிநொச்சி), அந்தோனிப்பிள்ளை (கிளிநொச்சி), சங்கர் (மன்னார்), இராமச்சந்திரன் (யாழ்ப்பாணம்), அன்னராசா (யாழ்ப்பாணம்), வர்ணகுலசிங்கம் (யாழ்ப்பாணம்) உள்ளிட்ட 12 பேர் இந்தப் பேச்சுவார்த்தையில் கலந்துகொள்கின்றனர்.

இரு நாட்டு மீனவர் பிரச்சினைக்குச் சுமுகமான தீர்வு எட்டப்படுவது தொடர்பாக முதல் கட்டமாக இலங்கை - இந்திய மீனவர்களிடையே மீனவர்களின் சொந்த முயற்சியில் பேச்சுவார்த்தை நடத்துவது குறித்து கடந்த செவ்வாய்க்கிழமை முடிவு செய்யப்பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

## நீதிக்கான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இலங்கை இராணுவத்தின் முன்னாள் தளபதி ஜகத் ஜயசூரிய மற்றும் இலங்கை இராணுவத்தின் சார்பாகச் செயற்பட்ட துணை இராணுவக் குழுவான கருணா குழுவின் தலைவர் விநாயகமூர்த்தி முரளிதரன் ஆகியோர் மீது பிரித்தானியா விதித்துள்ள தடை ஈழத்தமிழர்களின் நீதிக்கான தேடலின் நம்பிக்கைக் கீற்று எனவும், அந்த அறிவிப்பை தாம் வரவேற்பதாகவும் நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவருமான சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகரகத்துக்குக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ள சிறீதரன் எம்.பி, இந்த விடயம் சார்ந்து அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

"எதிர்வரும் செப்டெம்பரில் நடைபெறவுள்ள ஜெனிவா அமர்வுக்கு முன்னதாக, இனப்படுகொலையின் பங்குதாரர்களான நால்வர் மீது பிரித்தானிய அரசு விதித்துள்ள பயணத் தடை, காலம் தாழ்த்தியாவது தமிழர்களுக்கு நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கையை மீள அரும்பச் செய்திருக்கின்றது.

இலங்கையில், குறிப்பாக வடக்கு, கிழக்கு தமிழர்கள் மீது பேரினவாத அரசு வலிந்து நடத்திய போரின்போது மோசமான மனித உரிமை மீறல்கள், நீதிக்குப் புறம்பான கொலைகள், சித்திரவதைகள், பாலியல் வன்முறைகளில் ஈடுபட்ட இந்த நான்கு பேர் மீதும் பிரித்தானிய அரசு விதித்திருக்கும் தடையையும், சொத்து முடக்க அறிவிப்பையும், சர்வதேச நீதிகோரும் பயணத்தில் தமக்கு கிடைத்திருக்கும் ஒரு சிறிய நம்பிக்கை ஒளிக்கீற்றாகவே ஈழத்தமிழர்கள் பார்க்கின்றார்கள்.

எண்பது வருடங்களுக்கு மேலாக கேட்பாரற்று படுகொலை செய்யப்பட்ட தமிழ்த்தேசிய இனத்தின் எண்ணங்களுக்கும் இறந்துபோன ஆத்மாக்களுக்கும் இந்தத் தடை அறிவிப்பு தமக்கான நீதியின் கதவு திறக்கும் என்ற நம்பிக்கையைக் கொடுத்திருக்கின்றது.

காலனித்துவ ஆட்சி முடிவில், சுதேசிகளான தமிழர்களின் இறைமையை பிறிதோர் இனத்தவரிடம் ஒப்படைத்துச் சென்றமை வரலாற்றுத் தவறு என்பதை உலகம் இப்போதாவது உணரத்தலைப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது." - என்றுள்ளது.

## கிராண்ட்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான துப்பாக்கிதாரி ஒருவர் கிராண்ட்பாஸ் பொலிஸாரால் இன்று செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

கிராண்ட்பாஸ் - நாவலகம் வீதி பகுதிக்குக் கடந்த 17 ஆம் திகதி இரவு 9.40 மணியளவில் மோட்டார் சைக்கிளில் சென்ற இருவர் மோட்டார் சைக்கிள்களின் உதிரிப்பாகங்களை விற்பனை செய்யும் நிலையம் ஒன்றில் இருந்த இரண்டு நபர்கள் மீது துப்பாக்கிச்சூட்டை நடத்திவிட்டு தப்பிச் சென்றிருந்தனர்.

துப்பாக்கிச் சூட்டில் படுகாயமடைந்த இருவரும் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இது தொடர்பில் கிராண்ட்பாஸ் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில், இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பத்துடன் தொடர்புடைய பிரதான துப்பாக்கிதாரி இன்று கைது செய்யப்பட்டுள்ளார்.

கிராண்ட்பாஸ் பகுதியைச் சேர்ந்த 32 வயதுடையவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் மேலதிக விசாரணைகளின் பின்னர் கொழும்பு புதுக்கடை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளார்.

இந்தத் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் தொடர்பில் இதுவரை பெண் உட்பட ஐந்து பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் கிராண்ட்பாஸ் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# யோஷித மற்றும் அவரது மனைவி பொலிஸ் நிலையத்தில் ஆஜர்!

யாழ்ப்பாணம், மார்ச் 25

கொழும்பில் உள்ள இரவு விடுதி ஒன்றின் முன் கடந்த மார்ச் 22 ஆம் திகதி இடம்பெற்ற மோதல் சம்பவம் தொடர்பில் வாக்குமூலம் கொடுப்பதற்காக யோஷித ராஜபக்ஷ மற்றும் அவரது மனைவி கொம்பனித்தெரு பொலிஸ் நிலையத்தில் ஆஜராகியுள்ளனர்.

குறித்த விடுதியின் முன் இடம்பெற்ற மோதல் சம்பவத்துடன் யோஷித ராஜபக்ஷ வுடன் வந்த குழுவினர் சம்பந்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மோதல் சம்பவத்தில் ஒரு பாதுகாப்பு அதிகாரி தாக்கப்பட்டு காயமடைந்ததாகவும், காயமடைந்த பாதுகாப்பு அதிகாரி தற்போது கொழும்பில் உள்ள ஒரு தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த மோதல் சம்பவம் தொடர்பில் தெஹிவளை, அத்திடிய மற்றும் திம்பிரிகஸ்யாய ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களை பொலிசார் அடையாளம் கண்டுள்ள போதும், குறித்த சந்தேக நபர்கள் தற்போது அந்தப் பகுதியை விட்டு தப்பிச் சென்றுவிட்டதாகவும் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில், குறித்த மொத சம்பவம் தொடர்பில் யோஷித மற்றும் அவரது மனைவி வாக்குமூலம் ஒன்றை பெற்றுக் கொடுக்க கொம்பனித்தெரு பொலிஸ் நிலையத்தில் ஆஜராகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சட்டவிரோத நடவடிக்கைகளை கட்டுப்படுத்த விசேட அதிரடிப்படை!

யாழ்ப்பாணம், மார்ச் 25

ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்கள் மற்றும் ஏனைய சட்டவிரோத நடவடிக்கைகளை கட்டுப்படுத்தும் நோக்கில் புதிதாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட 500 விசேட அதிரடிப்படை உறுப்பினர்களை கடமையில் ஈடுபடுத்த தீர்மானித்துள்ளதாக பொதுப் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

அதன்படி புதிய உறுப்பினர்கள் தங்கள் படிப்புகளை நிறைவு செய்து விரைவில் சேவைக்கு வருகை தருவார்கள் என ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

மேலும் தென் மாகாணத்தில் இடம்பெறும் துப்பாக்கிச்சூட்டு சம்பவங்களை கட்டுப்படுத்த 4 பொலிஸ் குழுக்கள் மற்றும் அம்பலாங்கொடை பிரதேசத்திலும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களை ஒழிப்பதற்காக இரண்டு விசேட பொலிஸ் குழுக்களும் நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நாடு முழுவதும் பொது மக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது– பாதுகாப்பு பிரதி அமைச்சர்!

யாழ்ப்பாணம், மார்ச் 25

நாடு முழுவதும் பொது மக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண ஜயசேகர தெரிவித்துள்ளார்.

இன்று (25) நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்ட அமைச்சரிடம், நாட்டின் பாதுகாப்பு குறித்து ஊடகவியலாளர்கள் வினவிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

நாடு முழுவதும் பொது மக்களின் பாதுகாப்பை நாங்கள் உறுதிப்படுத்தியுள்ளோம். அதற்காக ஒரு விசேட வேலைத்திட்டத்தை நாங்கள் செயல்படுத்தி வருகிறோம்.

நாட்டில் இடம்பெறுவது பாதாள குழுக்களுக்கு இடையிலான மோதலாக உள்ளது. ஆனால் அதனால் தேசிய பாதுகாப்புக்கு பெரிய பாதிப்பு இல்லை. எங்கள் பொது பாதுகாப்பு அமைச்சு அதற்காக விசேட நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது என்று தெரிவித்தார்.









இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 25.03.2025இல் வெளியிடப்பெற்றது.